Action For Refugees In Lewisham
**ADVICE & ADVOCACY SERVICE**

advice quality standard

# MAXIMISATION
# உங்கள் உரிமைகளை அறிந்துகொள்ளவும்
## BOOKLET



நீங்கள் ஒரு ஒற்றை நபரா? ஒரு அறையைப் பகிர்ந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளீர்களா அல்லது பகிர்ந்துகொள்கிறீர்களா? உங்கள் உரிமைகள் தொடர்பாக உங்களுக்கு அறிவுரை வேண்டுமா?

எங்கள் வேலை பற்றி அதிகளவில் அறிந்துகொள்ளவும்.

**HTTPS://WWW.AFRIL.ORG.UK/ADVICE-ADVOCACY/**

# உச்சம் காணல் என்பது என்ன?

உச்சம் காணல் என்பது ஆரம்ப தஞ்சம் வசிப்பிடத்தில் (பொதுவாக ஹோட்டல்களில்) ஒரு அறையை ஒற்றை வயதுவந்த தஞ்சம் கோருவோர் பகிர்ந்துகொள்ளுதல் பற்றிய கொள்கையாகும். ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு காரணம் இருந்தாலே தவிர, ஒற்றை வயதுவந்த தஞ்சம் கோரும் அனைவரும் ஒரு அறையைப் பகிர்ந்துகொள்ள முடியும் என்ற ஊகத்தின் அடிப்படையில் ஹோம் ஆபிஸ் என்பதும் தஞ்ச வசிப்பிடம் வழங்குவோரும் இப்போது செயல்படுகிறார்கள் எனத் தோன்றுகின்றது. தஞ்ச ஆதரவு வசிப்பிடம் ஒரு ‘வேறு மாற்று வழி இல்லை’ எனப்பட்ட ஒரு அடிப்படையில் வழங்கப்படுகின்றது. ஆகையால், ஹோம் ஆபிசின் பொருத்தம் பற்றிய அளவுகோல்கள் என்பதன் கீழ், ஒரு அறையைப் பகிர்ந்துகொள்வதிலிருந்தும் நீங்கள் விதிவிலக்கு பெற்றாலே தவிர, இதுவே உங்களுக்கு உரிமையுள்ள ஒரேயொரு வசிப்பிடம் வழங்கலாக இருக்கக்கூடும்.



Action For Refugees In Lewisham

# உச்சம் காணல் என்பதன் கீழ், அறையைப் பகிர்ந்துகொள்வதிலிருந்தும் யார் விதிவிலக்கு பெறுகிறார்?

2023 ஜூலை 12இல் வெளியிடப்பட்ட ஹோம் ஆபிசின் பொருத்தம் பற்றிய அளவுகோல்களின் கீழ், பின்வருவோர் அறையைப் பகிர்ந்துகொள்வதிலிருந்தும் விதிவிலக்கு பெறுகிறார்கள்:

- 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்லது 65 வயதுக்கு மேலானவர்கள்
- நவீன அடிமைத்தனத்தால் பாதிக்கப்பட்ட ஒருவர்;
- தஞ்சம் கோருவோர் (வரவேற்பு நிலைகள்) விதிகள் 2005இன் கீழ் பாதிக்கப்படக்கூடியவர்கள்
- குறைபாடுள்ளோர்;
- வயது முதிர்ந்தோர்;
- கற்பழிப்பு, சித்திரவதை, உளவியல்ரீதியான, உடல்ரீதியான அல்லது பால்ரீதியான வன்செயல் அனுபவங்கள் மற்றும் இந்த மூன்று விடயங்களிலும் அவர்களுக்கு விஷேட தேவைகள் உண்டு என உறுதிப்படுத்தும் அவர்களின் நிலைமை பற்றிய ஒரு தனிப்பட்ட மதிப்பீட்டைப் பெற்றுள்ளவர்கள்
- நடமாடுதல் குறித்த பிரச்சினைகள் அல்லது ஒரு உடல்ரீதியான குறைபாடு உள்ளவர்
- தற்போதிருக்கும் காச நோய், அல்லது தொற்றுவியாதிகள், பாரதூரமான உள ஆரோக்கிய பிரச்சினைகள் (உயர்ந்த ஆபத்து அல்லது தற்கொலை அல்லத சுய அல்லது மற்றவர்களுக்கான தீங்கு), நீண்ட காலமாக நீடிக்கும் வியாதிகள் அல்லது HIV போன்றவை உட்பட, சிக்கலான ஆரோக்கிய தேவைகள் உள்ளோர்;
- ஆவணப்படுத்தப்பட்டதான குழப்பம் ஏற்படுத்தும் ஒரு வரலாறு உள்ளவர்
- ஹோம் ஆபிஸ் வெளிநாட்டு தேசிய குற்றம் புரிவோர் குழுவுடன் ஒரு பிரச்சினையைக் கொண்டுள்ள ஒருவர்
- அகதி நிலை வழங்கப்பட்டவர்
- அகற்றப்படுவதற்காகக் காத்திருப்பவர் அல்லது அகற்றப்படுவதற்கான வழிகாட்டல்கள் பெற்றவர்
- ஒரு சார்ந்திருக்கும் பிள்ளை உள்ளவர்

Action For Refugees In Lewisham

# இதன் கருத்து என்ன?

பொருத்தம் அளவுகோல்கள் என்பதன் கீழ் நீங்கள் விதிவிலக்கு பெறக்கூடிய வழிகளுக்கான சில உதாரணங்கள்(ஆனால் இது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட பட்டியல் அல்ல)

- நீங்கள் சித்திரவதையிலிருந்தும் தப்பிப் பிழைத்த ஒருவர். இதன் காரணமாக, உறங்குவதற்கான உங்கள் ஆற்றலைப் பாதிக்கும் உள ஆரோக்கிய பிரச்சினைகள் உங்களுக்கு உள்ளன.

- நீங்கள் ஆள் கடத்தப்படுவதிலிருந்தும் தப்பிப் பிழைத்த ஒருவர். தற்போது தேசிய சிபார்சு முறை (நாசனல் றெவறல் மெகனிசிம்) என்பதன் கீழ் ஒரு வழக்கு உங்களுக்கு உள்ளது. (ஹெஸ்டியா அல்லது சல்வேசன் ஆர்மி என்பதன் மூலமாக ஒரு ஆதரவு வேலையாளர் உங்களுக்கு இருந்தால், இது உங்களுக்குப் பொருந்தக்கூடும்).

- உங்களுக்கு ஒரு உள ஆரோக்கிய வியாதி உள்ளது. அதைக் கவனித்துக்கொள்வதற்காக நீங்கள் தொழிலறிஞர்களிடமிருந்து உதவியைத் தேடுகிறீர்கள்.

- நீங்கள் உடல்ரீதியாகக் குறைபாடுள்ளவராக இருக்கிறீர்கள். நடமாட்டம் தொடர்பான பிரச்சினைகள் உங்களுக்கு உள்ளன. அல்லது உங்கள் நோய் எதிர்ப்பு சக்தியைப் பலவீனமாக்கும் நீண்ட காலமாக நீடிக்கும் ஒரு ஆரோக்கிய பிரச்சினை உங்களுக்கு உள்ளது.

இது ஒரு முழுமையான பட்டியல் அல்ல. ஒவ்வொருவருடைய விடயமும் வேறுபட்டது. அதிகளவிலான காரணங்களுக்காக, அறையைப் பகிர்ந்துகொள்ளவதற்கு மக்கள் பொருத்தமற்றவர்களாக இருக்கலாம்.

# அறையைப் பகிர்ந்துகொள்வதை எவ்வாறு எதிர்க்கலாம், அல்லது நீங்கள் விதிவிலக்கு பெற்றவர் என எவ்வாறு நிரூபிக்கலாம்?

ஒரு அறையைப் பகிர்ந்துகொள்ளுமாறு நீங்கள் கேட்கப்பட்டால் அல்லது தற்போது நீங்கள் ஒரு அறையைப் பகிர்கிறீர்கள் என்றால், மற்றும் இதனை எதிர்ப்பதற்கு நீங்கள் விரும்பினால், மேலுள்ள பொருத்தம் அளவுகோல்களை நீங்கள் நிறைவேற்றும் ஒரு வழிக்கான சான்றை நீங்கள் கொடுக்க முடிந்தால் மாத்திரம் எதிர்ப்பதற்கான காரணங்கள் உங்களுக்கு இருக்கலாம். இந்தச் சான்று மைக்றண்ட் ஹெல்ப் என்பதற்கும் உங்களுக்கு வசிப்பிடம் வழங்குபவருக்கும் (Clearsprings, Serco அல்லது Mears) வழங்கப்பட வேண்டும். இந்த வேண்டுகோளுக்கான ஒரு உதாரணம் மற்றும் இது அனுப்பப்படுவதற்கான சரியான மின் அஞ்சல் முகவரிகள் அடுத்த பக்கங்களில் கண்டுகொள்ளப்படலாம்.

உங்கள் கரிசனைகளை வசிப்பிடம் வழங்குவோர் வீட்டு வசதி அதிகாரி அல்லது தரை மட்டத்திலுள்ள ஹோட்டல் ஊழியர்கள் என்போருக்கும் நீங்கள் தெரிவிக்க வேண்டும். மேலும், சாத்தியமான முதலாவது சந்தர்ப்பத்தில் உங்கள் காரணங்களைத் தெளிவான முறையில் நீங்கள் விளக்க வேண்டும்.

அறை பகிர்ந்துகொள்வதை எதிர்ப்பதற்கான மிகப் பலம் பொருந்திய வாய்ப்பைப் பெறுவதற்கு உங்கள் விடயம் பற்றிய உயர்ந்த தரமான சான்றைக் கொடுப்பது மிகவும் முக்கியமானது. உங்கள் NRM ஆதரவு வேலையாளரிடமிருந்து ஒரு கடிதம், உங்கள் மருத்துவ ஆலோசகர் அல்லது உள நோய் மருத்துவரிடமிருந்து ஒரு கடிதம், உங்கள் குடும்ப மருத்துவரிடமிருந்து உங்களின் மருத்துவ பதிவேடுகள் என்பன சான்றுக்கான சில உதாரணங்களாக இருக்கலாம்.

சான்றைப் பெற்றுக்கொள்ளுதல் கடினமாக இருக்கலாம். உங்கள் நிலைமையை உறுதிப்படுத்தும் மருத்துவ சான்று உங்களுக்குத் தேவைப்பட்டால், இதை வேண்டுவதற்கு ஒரு குடும்ப மருத்துவர் நியமனத்தை நீங்கள் செய்ய வேண்டும் அல்லது உங்கள் மருத்துவ ஆலோசகரை அல்லது உள மருத்துவரை நீங்கள் தொடர்புகொள்ள வேண்டும்.

மைக்றண்ட் ஹெல்ப் என்பதை அல்லது வசிப்பிடம் வழங்குபவரைத் தொடர்புகொண்ட பின்னர், நீங்கள் ஒரு பதிலைப் பெற்றுக்கொர்ள்ளாவிட்டால், அல்லது அறையைப் பகிர்ந்துகொள்வதற்கு நீங்கள் இன்னும் பொருத்தமானவர் என உங்களுக்குச் சொல்லப்பட்டால், இதனை எதிர்த்து ஹோம் ஆபிசுக்கு ஒரு சட்டரீதியான கடிதத்தை நீங்கள் அனுப்ப முடியும். இது தொடர்பாக, அவர்களால் உங்களுக்கு உதவ முடியுமா என அறிவதற்கு உங்களுக்கு ஆதரவளிக்கும் தொண்டு நிறுவனத்துடன் பேசவும்.

Action For Refugees In Lewisham

# EXAMPLE EMAIL

New Message

Recipients

Subject

Dear Sir/Madam

RE: **[INSERT YOUR NAME, DATE OF BIRTH, HOME OFFICE or PORT REFERENCE NUMBER, COUNTRY OF ORIGIN, ROOM NUMBER and ADDRESS]**

I am writing to you in regard to my current Asylum Support Accommodation room allocation to request that I am **[transferred to / remain in]** a single room. I **[am currently/ have been told that I must]** share a room with another person/s and I am deeply concerned about this.

Under the Home Office Suitability Criteria published on 12th July 2023, I believe that I should not be asked to share a room because [**INSERT REASON WHY YOU SHOULD NOT SHARE A ROOM UNDER THE LIST ABOVE].**

This means that **[INSERT IMPACT OF SHARING A ROOM ON YOU].**

I have provided evidence of the reasons why I do not fit the suitability criteria to share a room, in the form of **[INSERT A DESCRIPTION OF EVIDENCE, e.g a GP Letter, a letter from my psychiatrist].**

I would be grateful for an urgent response within 14 days, by no later than **[INSERT DAY 14 DAYS AWAY]**. If I do not receive a response, I will seek advice on escalating this matter to pre-action correspondence.

Please provide a response to this request directly.

Regards

**[INSERT YOUR NAME]**

Tahoma

AFRIL
Action For Refugees In Lewisham

# EXAMPLE EMAIL IN YOUR LANGUAGE

## TAMIL

அன்புள்ள ஐயா /அம்மா

விடயம்: **[உங்கள் பெயர், பிறந்த தேதி, ஹோம் ஆபிஸ் அல்லது துறைமுக குறிப்பு எண், சொந்த நாடு, அறை எண் மற்றும் முகவரி என்பவற்றை இங்கே உள்ளடக்கவும்]**
ஒரு ஒற்றை அறைக்கு நான் **[மாற்றப்படுகிறேன்/அதில் தொடர்ந்து இருக்கிறேன்]** என வேண்டிக்கொள்வதற்காக எனது தற்போதுள்ள தஞ்சம் ஆதரவு வசிப்பிடம் தொடர்பான அறை ஒதுக்கீடு பற்றி உங்களுக்கு எழுதுகின்றேன். இன்னொரு நபருடன் / நபர்களுடன் ஒரு அறையை நான் பகிர்ந்துகொள்ள வேண்டும் என நான் **[தற்போது சொல்லப்படுகிறேன்/ சொல்லப்பட்டுள்ளேன்].** இது குறித்து ஆழ்ந்த கரிசனையடைகிறேன்.

2023 ஜூலை 12ஆம் தேதி வெளியிடப்பட்ட ஹோம் ஆபிஸ் பொருத்தம் அளவுகோல்கள் என்பதன் கீழ் ஒரு அறையைப் பகிர்ந்துகொள்ளுமாறு நான் கேட்டுக்கொள்ளப்படக்கூடாது என நம்புகின்றேன். ஏனென்றால் [**மேலுள்ள பட்டியலின் கீழ் ஒரு அறையை நீங்கள் ஏன் பகிர்ந்துகொள்ளக்கூடாது என்பதற்கான காரணத்தை உள்ளடக்கவும்].**

இதன் கருத்து என்னவெனில் [ **ஒரு அறையைப் பகிர்ந்துகொள்ளுதல் உங்கள் மீது ஏற்படுத்தும் தாக்கத்தை இங்கே உள்ளடக்கவும்].**

**[சான்று பற்றிய ஒரு விபரத்தை இங்கே உள்ளடக்கவும், உதாரணமாக ஒரு குடும்ப மருத்துவரின் கடிதம், எனது உள மருத்துவரிடமிருந்து ஒரு கடிதம்]** மூலமாக, ஒரு அறையைப் பகிர்ந்துகொள்வதற்கான பொருத்தம் அளவுகோல்கள் எனக்குப் பொருந்தவில்லை என்பதற்கான காரணங்கள் பற்றிய சான்றை வழங்கியுள்ளேன்.

**[14 நாட்களுக்கு அப்பாலான ஒரு தேதியை உள்ளடக்கவும்;]** க்குப் பிந்தாமல், 14 நாட்களுக்குள் ஒரு அவசரமான பதிலுக்காக நன்றி உடையவனாக இருப்பேன். ஒரு பதிலை நான் பெற்றுக்கொள்ளாவிட்டால், சட்ட நடவடிக்கைக்கு முன்னரான தொடர்புக்கு இந்த விடயத்தை எடுத்துச் செல்வது குறித்து அறிவுரை தேடிக்கொள்வேன்.

தயவுசெய்து இந்த வேண்டுகோளுக்கான ஒரு பதிலை நேரடியாக வழங்கவும்.

அன்புடன்
**[உங்கள் பெயரை உள்ளடக்கவும்]**

Action For Refugees In Lewisham

# யூகே அகதிகள் வசிப்பிடம் வழங்குபவர் படம்




© https://www.gov.uk/

**மின் அஞ்சல் அனுப்பப்படவுள்ளோர்:** migrant help coc@migranthelpuk.org

**உங்கள் பகுதிக்கு ஏற்றவாறு இந்த வசிப்பிடம் வழங்குவோர்களில் ஒருவருக்கு.**

MEARS
carola.donald@mearshousing.co.uk

serco
aasc.safeguarding@serco.com

Clearsprings Group
lse.safeguarding@ready-homes.com